**தலைப்பு – 128 – பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை –2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 03 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான

உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்று, இதன் (அ) முதல் (ஆ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 1,094,579,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 947,760,639 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய ஏற்பாட்டில் ரூபா 146,818,361 தொகை அதாவது 13 சதவீதம் எஞ்சியிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழுபவை | 574,579,000 | 569,738,669 | 4,840,331 | 0.8 |
| மூலதனம் | 520,000,000 | 378,021,970 | 141,978,030 | 27.3 |
| கூட்டுத்தொகை | 1,094,579,000 | 947,760,639 | 146,818,361 | 13.4 |

### (ii) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,550,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

- 19 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயத்திற்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலான அளவைக் கொண்டிருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றின் பிரகாரம், பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ள படியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 12801 | 6,500,000 | 5,067,815 | 2,500,000 | 5,211,090 | 23,000,000 | 12,790,305 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 12801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 223,053 தொகையானதுடன் 05 ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் அந் நிலுவை மீதிகளை அறவிடுவதறகு அமைச்சு தவறியிருந்தது.

(ii) அமைச்சால் கடன் வழங்கப்படுகையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் பின்பற்றப்படாது ரூபா 15,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிபொறுப்பும்

**உள்ளகக் கணக்காய்வு**

அமைச்சால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2011 மே 08 ஆம் திகதி முதல் கணக்காய்வுத் தினமாகிய 2014 மே 31 ஆம் திகதி வரையான 03 ஆண்டுகளுக்கு மேலான காலமாக வெற்றிட நிலையில் காணப்பட்டதுடன் அமைச்சால் கோரப்பட்டிருந்த போதிலும் 2014 மே 31 ஆம் திகதி வரையிலும் அப் பதவிக்கு ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கைக்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்து முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சால் ரூபா 3.5 மில்லியன் பெறுமதியான 02 மோட்டார் வாகனங்கள் முறையே 2012 யூன் 17 ஆம் திகதியும் 2012 செப்தெம்பர் 13 ஆம் திகதியும் முறையற்ற விதத்தில் அரசாங்கக் கம்பனி ஒன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வேறு நிறுவகத்தின் சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்

மகளிர் விவகார அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 2 மில்லியன் பெறுமதியான ஓர் மோட்டார் வாகனம் அமைச்சால் 2010 மே 01 ஆம் திகதி முதல் முறையான அங்கீகாரமின்றி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**1.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட நட்டங்களில் ரூபா 107,787 இற்கு மதிப்பிடப்பட்டிருந்த நட்டங்கள் நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.7 செயற்திட்டத்தை செயற்படுத்தப்படுவதிலுள்ள நலிவுகள்

செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படல் மற்றும் செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(அ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதிலுள்ள கைவிடப்படல்

2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மட் பாண்டங்களின் உற்பத்திக் கிராம அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,365,000 செலவில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெலிஅத்த பன்சலகொட உற்பத்திக் கிராமம் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் முற்றாக செயற்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டம் செயற்படுத்துவதிலான தாமதம்

2012 ஆம் ஆண்டின் போது ரூபா 220 மில்லியன் தொகையான இந்திய நிதி உதவி மற்றும் ரூபா 50 மில்லியன் தொகையான உள்நாட்டு நிதியம் வழங்கப்பட்டு அச்சுவெலி தொழில்நுட்ப மக்கட்தொகுதியை மீளமைக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டம்

2013 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி 2013 ஆகஸ்ட் மாதம் நிறைவேற்றப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகள் ஒரு வருட கால தாமதத்தின் பின்னர் 2014 ஆகஸ்ட் 27 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டு தொழில்நுட்ப மக்கள் மக்கட்தொகுதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**1.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

அமைச்சால் கொள்வனவு செய்யப்பட்டு குருநாகல் வலயக் காரியாலயத்திற்கு வழங்கப்பட்டிருந்த பொருட் பதிவுப் பொருட்களில் கூடுதலானவை எவ்வித சட்டரீதியான கையளிப்பும் இன்றி வேறு அமைச்சால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அக் காரணத்தால் அமைச்சிடமிருந்த பொருட் பதிவுப் பொருட்களின் உரிமையும் பாதுகாப்பும் தொடர்பான சிக்கல் நிலை காணப்பட்டது.

**1.9 நட்டங்களும் இழப்புகளும்**

2012 ஆகஸ்ட் 21 ஆம் திகதி மோட்டார் வாகனம் ஒன்று விபத்திற்குள்ளான காரணத்தால் ஏற்க நேர்ந்த மொத்தச் செலவினத்தில் ரூபா 156,832 தொகையை செலுத்துவதற்கு காப்புறுதி மறுத்திருந்தது. இவ் விபத்து தொடர்பாக வாகனத்திற்கு நியமிக்கப்பட்ட சாரதி இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்தி சபையின் ஓர் உத்தியோகத்தரானதுடன் உரிய நட்டத்தில் 50 சதவீதம் மாத்திரம் தவணை அடிப்படையில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**1.10 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 11 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 396 | 310 | 86 |
| (iv) | ஆரம்ப நிலை | 31 | 24 | 07 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 05 | 05 | - |
| | மொத்தம் | 451 | 351 | 100 |

மீளாய்வாண்டின் இறுதி வரை 100 வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனிதவளங்கள்

அமைச்சால் மீளாய்வாண்டின் போது வேறு தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | வேறு தரப்பினர் | விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| அபிவிருத்தி உதவியாளர் | 01 | சனாதிபதி செயலாற்றல் படையணி | 2009.05.27 ஆம் திகதி முதல் |
| மேற்படி | 01 | பிரதேச செயலகம் கேகாலை | 2013.07.29 ஆம் திகதி முதல் |

(இ) வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள்

அமைச்சால் ஓர் சபையின் சாரதி ஒருவர் 2011 ஏப்ரல் முதல் கணக்காய்வுத் தினமாகிய 2014 மே 31 ஆம் திகதி வரையான 03 ஆண்டுகளுக்கு மேலான காலமாக முறையற்ற விதத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.